விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No.

# உதயம்

வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவந்திபுரம் 1—12—46 வியஞு கார்த்திகைமீ 16உ ஞாயிறு | இதழ் 18

# மணவாழ்க்கையும் மாதர்மறுமணமும்

(ஆர். அன்னபூரணி)

"புண்படைத்த என் நாடே கைம்மைக்
கூர்வேல்

பொழிகின்ருய் மங்கையர்மேல்
அழிகின்ருயே"

—'புரட்சிக் கவிஞர்'

"மாதர் மறுமணம்!"—ஆம்! ஆடவர், பெண்டிர் இருபாலரிலும் பெரும்பாலாரை வெறுப்பிலும், ஆத்திரத்திலும், அலட்சியத்திலும் மாழ்த்தும் சொற்றொடர்தான் அது! ஏன்?

ஒருபாலுக்கொரு நீதி, ஒரு சாதிக்கொரு நீதி கற்பிக்கும் ஓரவஞ்சக மதத்திட்டத்தில் மயங்கி நிற்கும் மாந்தர் கூட்டம் நிரம்பிய நாடிது! மகளிரை அடிமைகொண்டு கொடுமைப்படுத்தி, பெண்டிற்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்னும் பேய் மந்திரத்திற் கட்டுப்படுத்தி, உணர்ச்சியற்ற சடப்பொருள்களினுங் கேடாய், ஆடவர் தங்கைப் பொம்மைகளாய், இன்பக்கருவிகளாய், அடுப்பங்கரைக் "குக்கர் யந்திரங்களாய், அரிவையரை அடக்கியொடுக்கி வந்திருக்கும் ஆடவர் கூட்டத்தின் அசட்டு வர்தத்தைத் தாங்கி வந்திருக்கும் நாடிது! பெண்ணுக்கென்று பேத நீதிகண்டு, நம் உணர்ச்சிக் கவி கூறுவது போல் வாழ்க்கை இன்பம் என்னும் இன்ஒளியைப் பூரணமாய் அனுபவிக்க ஏற்பட்ட இரு கண்கள் போன்ற—ஆடவர், பெண்டிரில், 'கண்ணில் ஒன்றைப்பழுது செய்த இகழ்ச்சிக்குள்ளாகிய ஈரமற்ற, சுய நல நெஞ்சு படைத்த வைதிகம் செல்வாக்குப் பெற்றிருக்கும் நாடிது! 'பெண்' என்பவள் ஐம்புலனும் ஆறறிவும் படைத்த மானிட இனமாக மதிக்கப்படுவதில்லையே இந்நாவலந் தீவிலே! "கண்ணென்று மூக்கென்று காதென்று காட்டி கண்ணெதிரில் 'வரும் மறலி" யாகத்தானே பெரியோர் என்போர் கண்களுக்கும் காட்சியளித்திருக்கின்ருள் பெண்! ஏன்! இந்த இருபதாம் நூற்ருண்டில்தானென்ன? ஒழிந்ததோ பெண்ணடிமை? பெண்கள் ஆண்களின் அடிமைகள் என்ற அசட்டுத்தனம் மாண்டு மடிந்ததோ?

பண்டைக் காலத்திலே இந்நாட்டு மக்கள் பலவருடகாலம் நீண்ட வாழ்நாள் பெற்று வாழ்ந்திருந்தனர் என்று பழம் பெருமை பேசிப்பயனென்ன! இன்றைய நிலைமையில் இருபத்தி நான்கு வயது தானே ஓர் இந்தியனின் சராசரி வயது! இந்த அற்ப வாழ்நாளில், இந்நாட்டினர் இல்வாழ்வில் இன்பந் துய்த்திருப்பது இன்னும் அற்பகாலமே! இச்சொற்பக் காலத்திலும் இல்வாழ்வினை இன்பகரமாய் நடாத்தும் குடும்பங்கள் எத்தனை? ஒரு சிலவே! ஏன்? வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படையைத் துருவி நோக்கும் நற்புத்தியைத் தான் நாம் மறந்து விட்டோமே இடைக்காலத்தில்!

"வல்லான் வகுத்ததே வாய்க்கால்!" என்பதோர் வழக்குச் சொல். இன்று பெண்டிர் விஷயத்தில் அச்சொல்லின் கருத்தை எப்படிக் காரியத்தில் காண்கிறோம்?— பணம் படைத்தோரும்; பலம் படைத்தோரும் அழகிய நங்கையரை அடிமைகொண்டு, அவர்களின் சுக துக்கங்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தன்னல வாழ்வில் தோய்ந்து கிடக்கின்ருன்! பல தாரமணந்திங்காலும், இடமற்ற பல குழந்தைகளை அடுத்தடுத்துப் பெற்று, வளர்க்கும் வகையும் அறியாது திணரும் தீமையாலும், குழந்தை மணக்கொடுமையை நிறைவேற்றி, பால்ய விதவையரை நாட்டிற் பரப்பி அவருக்கு மறுமண உரிமையும் மறுத்துத் தவிக்கவிட்டுக் கண்மூடியிருக்கும் கண்ணற்ற தன்மையாலும் நடுத்தரக் கல்வியைக்கூட நங்கையர்க்கு நல்க அனுமதியாது அவர்கள் அறிவு வளர்ச்சியைத் தடுத்து, பண்டைத் தமிழ் மகளிர்போன்று கல்வி, ஒழுக்கம், அன்பு, அடக்கம் பொறுமை, ஈகை, பெருந்தன்மை, வீரம், விருந்தோம்பல் முதலிய இல்வாழ்விற்கின்றியமையா அணிகலன்களை அவர்கள் விரும்பிப்பெறும் வழிகளில் பயிலச் செய்யாமல் அவர்களைப் பேதமையிலாழ்த்தியதாலுமே, இன்று இந்நாட்டில் இல்லறத்தை நல்லறமாய் இன்புற நடத்தும் குடும்பங்கள் பெரிய அளவில் காணப்படாமைக்குக் காரணங்களாமென்பதை மறுக்க முடியுமோ? "சாரதா சட்டம்" மென்று ஒன்று குறுக்கிட்டது குழந்தை மணக்கொடுமையைத் தடுக்க ஆனுல் கெட்டை பெண்ணுக்கு 11 வயது வந்ததும், அவனுக்கு 14 வயது என்று சொல்லி மணவறையிலிருத்தும் பெற்ருேரும், குட்டைப் பெண்ணுக்கோ, அவள் குட்டை வயது தெரியாமல் குறுகிப் போயிருக்கிருள் என்று கூறி கைப்பிடி நாயகன் தேடிமுடிக்கும் பெற்ருேரும் இன்னும் இந்நாட்டிலிருக்கத் தானே செய்கிருர்கள்!—என்னே இவர்கள் தம் பேதமை!

மணவாழ்க்கை என்பது அவ்வளவு எளிதா? குழந்தை மணத்திலுள்ள கொடுமைகள் இந்நாட்டறிஞருக்குத் தெரியாதா? தெரிந்தும் அதை அலட்சியம் செய்து கண்மூடிப்பாதையிலேயே செல்வதற்கு என்னதான் காரணம்? இருக்கமுடியும்?

காரணங்கள் இருக்கின்றன!—பெண்ணுரிமையை இந்நாடு இடைக்கால முதல் ஒப்புக்கொள்வதில்லை. பெரிய படிப்பாளிகள் கூடப் புகலுகின்றனர் பெண்கள் ஆண்களுடன் போட்டியிடலாகாதென்று! ஏன்? அந்த இடத்தில் ஆடவர் தம் சுய நலம்பாதிக்கப்படுகிறதே! பல துறைகளிலும் ஆடவரோடு பெண்களும் சரிநிகர், சமமாக வந்துவிட்டால் பெண்டிரின் ஈங்காக் கடமையாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சமையல் வேலையும், பிற குடும்பத்தொல்லைகளும், புண்ணியக் கோட்டைகள் கட்டிப் பிறந்திருக்கும் பூமான்கள்பால் சார்ந்துவிடுமோ என்கிற பயம் ஆடவர் பலரையும் பற்றிவதைக்கிறதென்பது உண்மையன்ருே?

அஃதேபோன்று பெண்டிர்க்கு மண உரிமை மறுமண உரிமை கிடைத்துவிட்டால் என்னும்! ஆணுகப் பிறந்துவிட்ட காரணத்தால், பகுத்தறிவைப் புறம்பே ஒதுக்கி "நரைத்தலை சோர்ந்து நல்லுடல் எலும்பாய்"ப்போன கிழவனுங்கூட இளமைத் ததும்ப எழிலுந் ததும்ப நிற்கும் இளமங்கையினை மணமுடித்து அதனை "வாழ்க்கை" என்று சொல்லி வெட்கமில்லாமல் வாழ்கின்ற வாழ்க்கை என்னும்? பணம் படைத்தோன் தன் எந்தப் பருவத்திலும், எந்த ரோக நிலையிலும் இன்ப மங்கையரை விலைகொடுத்து வாங்கி அவ்வின நங்கையின் வாழுநாளை வீணுக்க இன்று இயலுகிறதே, இந்த அக்கிரமம்

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்

சிறு நாடகம் ப. கண்ணன்.

# ★ எதிரொலி ★

உறுப்பினர்

| | | |
|---|---|---|
| 1. | வேலன் | தோட்டக்காரன் மகன் |
| 2. | மரகதம் | மிட்டாதார் மகள் |
| 3. | சொக்கலிங்கம் | மிட்டாதார் மகன் |
| 4. | செல்வி | வீரப்பன் பேத்தி |
| 5. | பொன்னம்பலம் | மிட்டாதார் |
| 6. | தெய்வயானை | மிட்டாதார் மனைவி |
| 7. | வீரப்பன் | தோட்ட வேலைக்காரன் |
| 8. | மாசிலாமணி | ஜமீன்தார் |

மாசிலாமணியின் தாய், மாடு மேய்க்கும் பையன், வண்டிக்காரன்.

## காட்சி 1

(தோட்டத்துச் செடிகளுக்கு வீரப்பன் தண்ணீர் பாய்ச்சுகிறான். மரகதம் வருகிறாள்).

**மரகதம்** :—வீரப்பா! அந்த மல்லிகைக் கொடியை எவ்வளவு ஆசையா பதியபோட்டேன். வேர் பிடிக்கவே யில்லையே! என்ன காரணம்?

**வீரப்பன்** :—அந்த செடிக்கு ஒரு மாதிரி நோவும்மா? நல்லாருந்தலாங்கூட, குண்டுமல்லிச் செடியிருக்குதே, அது பதியத்துக்கு ஒழுங்கா வராது.

(வேலன் தொலையில் பாடுகிறான்).

"துன்பம் பிறர்க்கு நல் இன்பம் தமக்கெனும் துட்டமனோபாவம்
அன்பினை மாய்க்கும்; அறங்குலைக்கும்; புவி ஆக்கந்தனைக்
கெடுக்கும்
வன்புக்கெல்லாம் அதுவே துணையாய்விடும் வறுமையெலாம்
சேர்க்கும்
"இன்பம் எல்லார்க்கும்" என்றே சொல்லிப் பேரிகை
எங்கும் முழக்கிடுவாய்!"

**மர** :—(வியந்து) நில்லு! நில்லு!! அதென்ன பாட்டு! அமுதாகப் பொழிகிறது! ஆஹா! என்ன இனிமை! யாரது? ...என்ன குறைவு! என்ன கம்பீரநாதம்! எத்தகைய கருத்துக்கள்! நெஞ்சை யள்ளுகின்றதே! அந்தப் பாட்டில் இழைந்து வரும் இன்பச் சுவையும், இசையின் பண்பும், புரட்சிக் கருத்தும் கலை நுணுக்கமும் என் உயிரையே சிலிர்க்க வைக்கின்றதே! வீரப்பா! யார் பாடுவது?

**வீர** :—வேலந்தான் பாட்றான். குடிசையில்! என்னம்மா! அவ்வளவு நல்லாவா இருக்குது?

**மர** :—வேலன்!... வேலனா இவ்வளவு பெரிய இசைக் கலைஞனாய் விட்டான்?

**வீர** :—ஆமாம்மா! பட்டாளத்துக்குப் போன பெறவு, வேலன் ரொம்ப மாறிப்போயிட்டான்! மரகதம்! அவன் இப்போ பழைய வேலன், இல்லேம்மா, என்னென்னமோ பேசறான், படிக்கிறான் செய்யறான் எனக்கு ஒண்ணுமே சரியா வெளங்கலே ......!

(பாட்டு நிற்கிறது)

**மர** :—உம்... நடை உடை பேச்சுப் பார்வைகளெல்லாம் நாகரிகமாகத்தான் மாறியிருக்கின்றன, ஆனாலும் ... தாத்தா! தமிழிலும், பாட்டிலும் வேலன் இவ்வளவு பெரியவனாவான் என்று நான்நினைக்கவே யில்லை. இங்கிருந்தபொழுது தத்தாரி போல் கிராமியப் பாட்டு பாடிக்கொண்டு திரிந்தவன், இசையில் பெரிய கலைஞனாய் விட்டானே!

**வீர** :—(வியந்து) அப்படியாம்மா? எனக்கென்ன தெரியுது!

**மர** :—எனது இசையறிவைக்கொண்டு நானும் பல கச்சேரிகளைக் கேட்டு ரசித்திருக்கிறேன். இந்தப்பாட்டைப் போல் ஒன்றேனும் என் இதயத்தைத் தொட்டதில்லை! வேலன் படையில் மட்டுமல்ல, கலையிலும் தமிழிலும் உயர்நிலை பெற்றுவிட்டான். நீ ரொம்ப பாக்யசாலி தாத்தா!

**வீர** :—சந்தோசம்மா!...கலேகிலேங்கற தெல்லாம் எனக்கெங்கெம்மா தெரியப்போவுது? ஒன்னைப்போல பணக்காரப் பிள்ளெங்களுக்குத் தான் அது லாயக்கு!

**மர** :—இல்லே தாத்தா! படித்தவன் படிக்காதவன், ஏழை பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் எல்லோருக்கும் கலை பொதுவானது! அது மனித குலத்தின் பொதுவுடமை!

**வீர** :—(மகிழ்ந்து) உனக்கு நல்ல மனசம்மா!... மரகதம் இன்னொரு சேதி கேட்டியா?

**மர** :—என்ன?

**வீர** :—பட்டாளத்திலே வேலனோடே இருந்தவங்கெல்லாம் சேர்ந்து, நாடகம் நடத்துனாங்களாம். அவுங்களுக்குப் பாட்டெல்லாம் பளக்கி, பின்பாட்டும் பாடினானும் வேலன்! ஒரு நாள் வேசம் போட்டும் நடிச்சானாம், பெரிய அதிகாரிங்கெல்லாஞ் சேந்து, சந்தோசப்பட்டு அவனுக்குப் பெரிய மெடலொன்னும் சம்மானம் பண்ணியிருக்காங்கம்மா! பய பட்டாளத்திலே சேர்ந்ததும் தேவலைதான்! பாவி மவன்! என்னென்னமோ படிச்சிகிட்டு வந்திருக்கிறானே!

(தெய்வயானையம்மாள் தொலைவிலிருந்து!

**தெய்வயானை** :—மரகதம்! மரகதம்!

**மர** :—எம்மா! இதோ வந்துட்டேன்...(அவசரமாக) தாத்தா! பாட்டு எனக்குப் பெரு மகிழ்ச்சி யளித்ததாக வேலனிடம் சொல்லு, என்ன சொல்லுகிறாயா? மறந்துவிடாதே!

**வீர** :—ஆவுட்டும்மா, சொள்றேன். (மரகதம் போகிறாள்)

## காட்சி 2

(வீரப்பன் "லொக்கு" "லொக்"கென்று இருமிய வண்ணம் படுத்திருக்கிறான்)

**செல்லி** :—தாத்தா! இதோ, இந்தா மருந்தைக் குடிங்க தாத்தா.

**வீர** :—ஊத்தம்மா ...................(வாயில் ஊற்றுகிறாள்) உம்...எதைக்குடிச்சி என்ன ஆவப்போவுது? எனக்குப் பிழைப்பேங்கிற நம்பிக்கையில்லே; உடம்பு அப்படியே...ஒடிஞ்சு போவுது. பாவிப்பய! வேலன் எங்கே? இன்னும் வரலியா?

**செல்** :—வந்துடும் தாத்தா, நீங்க இப்படி யெல்லாம் பெணத்தக் கூடாது. (கோபித்து) எனக்கு ஒங்களைத் தவிர வேறெயாரு இருக்கறாங்க? நீங்களும் கண்ணை மூடிட்டா பெறவு ...நான் அனாதையா......!

**வீர** :—அழுவாதம்மா, நான் சாவமாட்டேன், நீ வேலனோடே சந்தோசமா பொழைக்கிறதைப் பாக்காமே என்னுசுரு போவுமா? அதோ, வேலனும் வந்துட்டான், வாடாப்பா! எங்கெடா போயிருந்தே? (வேலன் வருகிறான்)

**வேலன்** :—நம் கிராமத்தி வளங்களைப் பார்க்க ஆற்றுப் பக்கம் போயிருந்தேனப்பா (வியந்து) ஆமாம் உங்கள் கண்கள் ஏன் கலங்கி யிருக்கின்றன செல்வி ஏன் அழுதிருக்கிறாள்? என்ன நடந்தது? இப்பொழுது உடம்பு எப்படி யிருக்கிறது?

**வீர**:—உடம்பு...(இருமி) இனிமே தாங்காது! உம்...இன்னிக்கோ? நாளைக்கோ? எப்பசாவப் போறனோ?

---

(இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# நின்று நோக்கினால்

(ஏகாம்பரம் வேலூர்)

கார்ல் மார்க்ஸ் பிறப்பகம் பிரஷ்யா. கம்யூனிசக்கர்த்தா கார்ல் மார்க்ஸ். பொதுவுடைமைக் கொள்கை பிறந்தது பிரஷ்யாவிலே; பூத்தது ரஷ்யாவிலே; போதனையோடு நின்றது இங்கிலாந்திலே, புரட்சியோடு முடிவுற்றது பிரான்சிலே. வறுமை, வறுமைக்குரிய தத்துவங்களைத் தீர்க்கும் வன்மையைத் தந்தது கார்ல் மார்க்சுக்கு. பொருளாதாரப் பொதுவுடைமையோடு நிற்பதல்ல அவர் போதித்த கருத்துக்கள். நியாயம் கோருவோர் சங்கம் (League of just) 1836-ம் ஆண்டிலே தோன்றியது, தொழிலாளரும், வறியோரும் சக்திக்கேற்ற உழைப்பும், வாழ்வுக்கேற்ற வருவாயும் தருமாறு கோரிய நியாயத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த சங்கம் அது. அச்சங்கம் நீண்டநாட்கள் அப்பெயருடனேயே நிலவவில்லை. பின்னர் கொள்கைகள் பரந்து விரிவாக்கப் பட்டன.

உடைமையும், உழைப்பும் பொது; விரிந்த வாழ்வும், பரந்த ஞானமும் பொது; என்ற கொள்கைகள் புக, 1847.ம் ஆண்டு அச்சங்கத்திற்குப் பொதுவுடைமைச் சங்கம் (communist League) எனப் பெயர் மாற்றப் பெற்றது. சங்கத்திற்குரிய திட்டங்கள் தயாரித்தவர் கார்ல் மார்க்ஸ். பொருளாதாரப் பங்குரிமை மட்டுமின்றி பிற சிலவும் அவற்றில் இடம் பெறுகின்றன.

தனிச் சொத்துரிமை ரத்து, பரம்பரைச் சொத்து பாத்தியதை ரத்து, படிப்படியாக உயர்வுடைய வருமானவரி விதித்தல், அரசாங்கம் முதலில் பங்கேற்படுத்தி லேவாதேவி தொழில் அரசாங்கமே நடத்தல்: போக்கு வரத்து சாதனம் அரசங்க சுவாதீனமாதல் தொழிற்சாலை பொருளுற்பத்திசாதனம் அரசாங்கம் மயமாதல், எல்லோரும் வேலை செய்தல், நகர நாட்டுப்புற வேற்றுமை யொழித்தல், கல்வியும் பொருளுற்பத்தியும் ஒன்றாகி இலவசமாகப் போதித்தலாகிய இன்னபிறவும் அவ்வறிக்கையின் முக்கிய கொள்கைகளாம். மேலும், மதத்தைப் பற்றி கார்ல் மார்க்ஸ் கொண்ட கருத்தோ, "மதம் அபின் போன்றது; மகிழ்ச்சியைத் தருவதுபோல் பிரேமை காட்டும் மதத்தை அழித்தலே உண்மையான மகிழ்ச்சியைக் கோருவதாகும் என்பது. இவைகளை அப்படியே பின்பற்றி நிறுவிய அரசியலே இன்றைய ரஷ்யா. ஏகாதிபத்தியத்தைப் பற்றி லெனின் கூறுவதோ "எந்த முதலாளித்துவ வளர்ச்சி ஏகபோக உரிமையும், ரொக்க மூலதனமும், உலக மார்க்கட்டைப் பங்கிட்டுக் கொள்கிறதோ அதுவே ஏகாதிபத்தியம்" என்பதாகும் எனவே 'ஏகாதிபத்தியம் எவ்வுரு தாங்கி நாட்டில் நிலவினும் வேரறுத்தற்குரியதே அதன் முடிந்த முடிபு.

இறுதிக்காலம் மகமது நபியை சூழ்ந்தது. அப்போது அவர், தன்னைச் சூழ்ந்திருந்த மக்களைநோக்கி "ஆண்டவன் அரூபி; உருவ மற்றவன். அடிமையென்று மக்கட் பிறவியிலில்லை. இஸ்லாம் மதக்கருத்துக்களை ஒருவன் தழுவினால், உடனே அவன் உன் சகோதரனாகி விடுகிறான்; உனக்கும் அவனுக்கும் வேற்றுமையில்லை" என்று கூறுகிறார்.

# சேரடா வீரர் படை!

(வழுந்தூர் B. A. கனி)

இனியிருக்க முடிந் திடுமோ  
எழுந்திரடா தமிழ் மகனே!

பணியிருக்கு நம் எதிரே—  
பெரியாரின் வீர மொழி,

'தனியிருக்க வேண்டு மடா  
திராவிடமும், தயக்கம் விடு'

எனயிருக்க விரைந்திடடா  
எழுச்சி யுறும்பா சறைக்கே!

பொறுத்தது போதும் இன்றே  
புரட்சிகொள்! புறப்படு நீ

கருத்த நிறச் சட்டையுடன்  
கண்ணீர் போக்க! ஓடடா

வருத்தமுறச் செய்த அந்த  
வகையிலா நரிக் கூட்டத்தை

திருத்தமுறச் சிதைத் திடவே  
சேரடா வீரர் படை!

இன்று உலகிலே நாளுப்பக்கங்களிலும் கம்யூனிஸ்ட் கிளர்ச்சி வலுப்பெற்று வருகின்றது. நம் நாட்டிலும் கம்யூனிஸ்ட் இயக்கம் இருந்துவருகிறது இவர்களில் பலர் திராவிடக் கழகத் திட்டங்களில் குறை கூறுவதையும் காண்கிறோம். ஆனால் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களது பேச்சுக்களிலும், கொள்கைகளிலும் விரவிக்கிடக்கும் கருத்துக்களையும், கார்ல் மார்க்ஸ் கம்யூனிஸ்ட் அறிக்கைக் கருத்துக்களையும் ஒப்புநோக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம். கார்ல் மார்க்ஸ் பொருளாதாரச் சீர்திருத்தமும், லெனின் ஏகாதிபத்யக் கொள்கையும், மகமது நபி சாக்ரடீஸ் புத்தர் போன்றோர் கடவுட் கொள்கையும் பிழிந்து கலந்த சாறே பெரியாரின்– கொள்கைகள் என்றால் பேதம் காண்பதெங்ஙனம்?

பார்ப்பனரல்லாதார்க்குப் பதவி வழங்கும் வகையில் காட்டிய மித்ரபேதத்தைக் களைந்திடப்பேசிய காலத்து ஜஸ்டிஸ் பார்ட்டியாகத் திகழ்ந்தது. நலவுரிமைச் சங்கமாயிருந்த காலத்தும், தென்னிந்திய நலவுரிமைக் சங்கமாகத் திகழ்ந்ததேயொழிய இந்திய நலவுரிமைச் சங்கமாக இருக்க முடியவில்லை. முக்கிய உடனடியாக அமைய வேண்டிய பிரச்சனையின் பேரிலேயே கட்சிகள் பெயர் பெறுகின்றன. இந்தி எதிர்ப்புக் காலத்தே, தமிழர் கழகமாகத் திகழ்ந்தது என்றாலும் பொருந்தும், இன்றைய பிரச்சனை அனைவரும் ஒற்றுமை பெற்று சாதி, மதபேதம் நீக்கியப் புராதன திராவிடராதலும், திராவிடநாடு பிரித்தலுமேயாகும். எனவே திராவிடர் கழகமாக இன்று திகழ்கிறது. திராவிடநாட்டுப் பிரிவினையின் பின்னர் இக்கழகமே அரசியலமைப்பில் பொதுவுடைமைக் கழகமென்ற பெயர் பெறினும் வியப்பிற்குரியது ஏதுமில்லை.

கம்யூனிஸ்ட் என்று கூறிக்கொள்வோர், தாங்கள் கார்ல் மார்க்ஸ் திட்டத்தை அடிப்படையாக்கி, ரஷ்ய அரசியல் போன்ற அரசியல் நிறுவப்போகின்றவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர், இவர்கள் கம்யூனிஸ்ட் கொள்கையை அப்படியே பின்பற்றுவோரானால், இவர்கள் எவ்வகையில் திராவிடர்க் கழகக் கொள்கையினின்றுப் வேறுபட்டவர்கள் என்பது சிந்தித்தற்குரியதே!

# பிரிட்டிஷ் அழைப்பை

## முஸ்லீம் லீக் ஏற்றுக்கொண்டது.

வைஸ்ராய் சனிக்கிழமையன்று மன்னர் சர்க்காருடன் ஆலோசனை செய்ய புறப்படுகிறார். அவருடன் ஜனாப் ஜின்னா அவர்களும், ஜனாப் லியாத் அலிகான் அவர்களுடன் செல்கிறார்கள்.

காங்கிரஸ் பண்டித நேரு, ஸர்தார் படேல், சீக்கியத் தலைவர் ஸர்தார் பலதேவ ஸிங் ஆகிய மூவர்களும் மன்னர் சர்க்காரின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டனர்.

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்


# உதயம்

மலர் 1 1—12—46 இதழ் 18


## லண்டன் அழைக்கிறது

லண்டன்மா நகர மக்கள் இன்றாகிலும் ஓர் அளவுக்கு இந்தியாவின் நிலைமையை உணர்ந்திருக்கிறார்கள் என்பதை, இன்று, ஜனாப் ஜின்னா அவர்களுடன் ஜனாப் லியாகத் அலிகான் அவர்களும் ஆகிய இருவர்களும் வைஸ்ராயுடன் லண்டன் போகும் காட்சியே நாட்டின் நடப்பு நன்கு தெரியலானார்கள் என்பது விளங்குகிறது. இதே முறையில் தோழர் ஜவஹருக்கும், பட்டேலுக்கும், சீக்கிய தலைவர் பலதேவ சிங் அவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டு அவர்களால் மறுக்கப்பட்டன. ஆனால் அழைப்பை அங்கீகாரம் செய்து கொண்ட முஸ்லீம் லீகின் சார்பில் ஜனாப் ஜின்னாவும் ஜனாப் லியாகத் அலிகான் அவர்களும் வைஸ்ராயுடன் ஞாயறன்று லண்டன் செல்கிறார்கள்.

ஆனால் அன்று தூதுகோஷ்டி வந்தகாலத்து இந்தியாவிலிருக்கும் பல்வேறு இனங்களின் தேவைகளைப்பற்றியோ, வர்க்கங்களின் சிக்கல்களைப் பற்றியோ சிறிதும் பொருட்படுத்தாமலும், குறிப்பாக திராவிட மக்களைப் பற்றி ஒரு சிறிதும் நினைப்பில்லாமலும் காங்கிரஸ் கட்சியின் பிரச்சாரப் பீரங்கிக்குப் பயந்து, அதனிடம் இந்நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டுப்போன பிரிட்டிஷ்காரருக்கு இன்று விழிப்படைந்திருக்கிறது.

இதற்குக் காரணம் ஜனாப் ஜின்னாவின் அரசியல் தந்திரமாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் தலைவர்களின் எதேச்சதிகாரப் போக்கு என்றாலும் சரி அது அவர் அவர்களின் போக்கைப் பொறுத்திருக்கிற விஷயம்.

முஸ்லிம் லீக், இப்போது நடக்கப்போகும் அரசியல் நிர்ணய சபையில் சேர்ந்தாலும், அல்லது சேராவிட்டாலும் கூட்டியே தீர்வது என்ற கட்டத்தில் காங்கிரஸ் நிற்கிறது. முஸ்லீம் லீக் அங்கத்தினர்கள் எந்தவிதக் காரணத்தைக் கொண்டும் இடைக்கால சர்க்காரிலிருந்து விலகக்கூடாது என்ற திட்டத்தில் கடைபிடித்திருக்கிறது. இதையறிந்து கொண்டனர் காங்கிரஸ் தலைவர்கள். அதனால் தோழர் நேருவோ, பதவியை உதறித் தள்ளிவிட்டு, போராட்டத்தைத் துவக்குவது என்ற முறையில் பேசுகிறார்.

ஆனால் தோழர் பட்டேலோ பதவியை எந்த விதத்திலும் விட்டுவிடமாட்டோம் என்கிறார். அதுதான் சரியென்று பின்பாட்டு பாடுகிறார்கள் இந்துமகா சபைத் தலைவர்கள்;

இந்த நிலையில் இவர்கள் லண்டன் அழைப்பை யேற்று ஆங்கிலநாடு செல்லுகிறார்கள்.

இப்போதாவது இந்தியாவில் பல்வேறு கட்சிகள் உண்டு என்பதை மன்னர் சர்க்காரிலிருக்கும் மந்திரிகள் உணர்ந்ததைப்பற்றி மகிழ்ச்சியடைகிறோம் என்றாலும் இந்த நெருக்கடிக்குக் காரணஸ்தர் யார் என்றால் ஷை காட்டிய தூது கோஷ்டியால் நேர்ந்த கதிதான் என்பதை மறுக்க முடியாது.

என்றாலும் இப்போது லண்டனுக்கு போகும் ஜனாப் ஜின்னாவை எப்படியாகிலும் சரிப்படுத்தி விடலாம் என்ற நினைப்பில் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் நினைப்பார்களேயானால் அவர்கள் பெரும் ஏமாற்றம் அடைவார்கள் என்பதை வலியுறுத்துகிறோம். ஏனெனில் தோழர் ஜனாப் ஜின்னா அவர்கள் ஒரு பெரிய ராஜதந்திரி என்பது கடந்த சில ஆண்டுகளாக தோழர் காந்தியாரின் கபட நாடகம் அவரிடத்தில் பலிக்காமலிருப்பதே சான்றாகும்.

இருப்பினும், ஒன்று பிரிட்டாஷார் காங்கிரசை லீகின் மீதும், லீகை காங்கிரசின் மீதும் இவர்களின் இருவர் மீதும் சமஸ்தான மன்னர்களை ஏவிவிட்டு காரியம் நடத்தித் தங்கள் ஆட்சி நிலைபெற இன்றுவரை விளையாடிய திருவிளையாடல்கள் இனிமேல் நடவாது என்பதையும் விளக்கமாக எடுத்து உரைக்கிறோம்;

ஏனெனில் இன்று மக்கள் விழிப்படைந்து விட்டார்கள். சுதந்தரமாக வாழவேண்டுமென்ற நினைப்பு எல்லா மக்கள் நினைப்பிலும் நிலைத்துவிட்டது. இன்று இந்தியாவைப் பற்றி எல்லா நாடுகளும் கேட்கும் நிலையிலிருக்கிறது. குறிப்பாக தோழர் மால்ட்டோவ் அவர்கள் ஒரு தடவை "இந்தியா" என்று சொல்லிவிட்டாலுமே போதும் பிரிட்டனுக்கு ஒருவித திகில்தான். ஆகவே நாம் சொல்லுவது எல்லாம் இனியாகிலும் இங்கிலாந்திலுள்ள மக்கள் உண்மையை உணர்ந்து, ஒத்திபோடும் நிலையில் இந்தியாவை வைக்காமல் அவர் அவர்களின் தேவைகளை அறிந்து, அதன்படி நடந்துகொள்ளுவது தான் பிரிட்டிஷ் மந்திரிகளின் யுக்திசாலித்தனமாகும்.

ஆகவே இப்போதாவது நம் நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் "சுயராஜ்ஜியம்" வெள்ளையனிடத்திலிருந்து வாங்கி விட்டதாகக் கும்மாளம் போட்டுக்கொண்டு பொது மக்களை எத்தனை நாளைக்குத்தான் ஏமாற்றிக் கொண்டுவர முடியும் "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு" என்னும் பழமொழிப்படி லண்டனுக்குப் போகும் ஜின்னாவை பொருத்திருக்கிறது. நம் நாட்டுக் காங்கிரசின் கொட்டம் ஒடுங்க. அதுவிரைவில் தெரியும்.

இந்தியாவிலுள்ள பல்வேறு இனக்குறிக்கோள்களையும், வர்க்கப் போராட்டங்களையும், அரசியல் கட்சிகளின் தேவைகளையும் கலந்து ஆலோசித்து, உண்மையான ஒரு சுயப்பாதையைச் செய்யினிட்டாலொழிய' நிரந்தரமான சமாதானம் நிலைக்காது.

அப்படி நிலைத்தாலும் ஏழை மக்களுக்கும், பாட்டாளிகளுக்கும் பயன் தராதென்பதையும் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறோம்.

இனியாகிலும் காங்கிரஸ் தலைவர்கள் பிரட்டனை நம்புவதை விட்டு ஏழைமக்களின் பக்கம் சேரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## அறிக்கை.

இன்று நடைபெறும் சென்னை காங்கரஸ் சர்க்காரின் மில் ஜவுளிக் கொள்கை நாளுக்கு நாள் விபரீத போக்கில் போய்க் கொண்டிருக்கிறது. இதற்கு ஏற்ற முறையில் பொது மக்களின் எதிர்ப்பும் வலுத்துக்கொண்டே வருகிறது. இருந்த போதிலும் இன்று தலைமை தாங்கி பிரதம மந்திரியாயிருக்கும் தோழர் T. பிரகாசங்காரு அவர்கள் "கொக்குக்கு ஒன்றே மதி" என்னும் பழமொழிப்படி, தான் கொண்ட கருத்து சரியோ, தப்போ எடுத்ததை முடித்தல் என்னும் பிடிவாதத்திலிருப்பதைக் குறித்து நாம் வருத்தப்படுகிறோம். கடைசியாக இப்போது சென்னை மாகாண ஜவுளி கன்ட்ரோல் கமிஷனர் அவர்கள் ஜவுளி பங்கிட்டைப் பற்றி ஒரு அறிக்கை விடுத்துள்ளார். இதனை அடுத்தப் பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம், நேயர்கள் கவனிப்பார்களாக. அதில் வருஷத்திற்கு தலைக்கு 5 கஜம், சிறுவர்களுக்கு 2 கஜம் அதிலும் 2 வயது உட்பட்ட குழந்தைகளுக்கு என்ன செய்வது என்பது அதில் காணப்படவேயில்லை. ஆகவே குழந்தைகளுக்குத் துணியே கிடையாது என்பது விளங்குகிறது. இந்த திட்டம் நடைமுறையில், ஏன் மனிதன் தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமா என்றால் ஒரு வகையில் முடியுமென்று வைத்துக் கொண்டாலும் பெண்களுக்குச் சாத்தியமா என்று எண்ணிப் பார்த்திருப்பார்களானால் தலைக்கு 5 கெஜம் என்ற திட்டம் போட்டேயிருக்க மாட்டார்கள். அதிலும் நம் நாட்டுப் பெண்மணிகள் 8, 9, கெஜம் சேலைகளைக் கட்டுவதுதான் நம் நாட்டுப் பழக்கமாயிருக்க இப்படிப்பட்ட திட்டத்தை நம் நாடு அனுபவிக்க வேண்டியிருப்பதைக் குறித்து வருத்தம் ஒரு பக்கமிருந்தாலும் ஒரு பக்கம் ஆச்சர்யமாயிருக்கிறது. காரணம், நாகரிக நாடு என்று சொல்லப்படுகின்ற ஐரோப்பா நாடுகளில் யுத்த காலத்தில் பெண்களுக்கோ அல்லது ஆண்களுக்கோ இம்மாதிரியான திட்டம் போட்டதாகத் தெரியவில்லை, நிற்க.

மில் துணியை இரட்டையாகத்தான் கட்டிக்கொள்ள முடியும். இதற்கு 4 கெஜம் தேவை. மீதியிருக்கும் ஒரு கெஜத்துண்டை வைத்துக்கொண்டு சட்டைக்கோ அல்லது பனியனுக்கோ பயன் படுத்திக்கொள்ள முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள். பனியனுக்குப் பயன் படுத்திக்கொள்ளலாம் என்றால் அதற்கும் ஒரு கஜம் துணி போதாது. இந்த மொத்த 5 கெஜத்தை 2 தவணைகளில் வாங்கி கொள்ளவேண்டும். 2½ கெஜத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது பெண்மணிகளுக்கும் இதே முறையில்தான் 2½ கெஜமாகத் தருவார்கள், இது அவர்களுக்கு ரவிக்கைக்கும் பாடிக்குமே சரியாகப் போய் விடும். பிறகு சேலைக்குத் தவிக்க வேண்டிய நிலையில் நிற்கவேண்டியதுதான். பிறகு சிறுவர்களுக்கு 2 கெஜம் என்னும் திட்டத்தைப் பார்த்தால் பையன் விரும்பும் சாதாரண ஒரு அரைக்கால் சட்டையும், பனியனும் தைத்துவிடலாம். ஆனால் பையன் அதனைத் தோய்த்து மாற்றி உடுத்துவதற்கு வேறு உடை கிடையாது. கிடையாதெனவே பையன் சட்டையைத் தோய்க்காமலும், குளிக்காமலும் இருக்கவேண்டியதுதான். ஆனால் 2 வயது உட்பட்ட குழந்தைகளின் கதி என்ன ?

பெரியவர்களுக்குத் தேவையான துணிகளைக் காட்டிலும் 2 வயது குழந்தைக்களுக்குத்தான் துணி அதிகம் தேவையாக இருப்பதை நாம் அன்றாட வாழ்க்கையில் கண்டு வருகிறோம். இப்படியிருக்க குழந்தைகளை தெருவில் நிர்மாணமாக விடுவது அறிவுடைமையாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இது கிடக்க.

அப்படித்தான் 2½, 2½ கெஜ துணிதான் அந்த அந்த ஆறுமாதத்தில் கட்டாயம் கிட்டுமா என்றால் அதுதான் யோசித்துப் பார்க்க வேண்டிய விஷயம் ஏனென்றால் இன்னும், இன்னென்ன நெம்பர் உள்ள கார்டுகளை உடையவர்கள் குறிப்பிட்ட கடையில் போய் வாங்கிகொள்ள வேண்டுமென்று பதிவு செய்யப்படவில்லை.

இருப்பினும் இந்த டிசம்பர் மாதத்திற்குள் மில் துணிவாங்க எவ்வளவோ பேர்களிடம் (அரிசி ரேஷன் கார்டுகள்) இருக்கின்றன. அவர்கள் மில் துணி வாங்க உரிமை யிருக்கிறதென்றாலும் போய் கடைக்காரர்களைக் கேட்டால் கேட்கும் தினுசு கொடுக்காமல், குறிப்பாக பெண்கள் போய் தங்களுக்குப் புடவை கேட்டால் மோட்டா மில்-துணி சட்டைக்காக கிடைக்கிறது அல்லது வேஷ்டி கிடைப்பதுண்டு இடுப்பு வேஷ்டி தேவையுள்ளவர்கள் போய் கடையில் கேட்கும் போது 5 கெஜ புடவைகள் வந்து குதிப்பதுண்டு இதனால் எவ்வளவோ பேர்கள் தங்களுக்கு வேண்டிய துணிகள் கிடைக்காததால் அப்படியே தங்களுடைய கார்டுகளை இப்பொழுதும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் இருக்கிறவர்களுக்குப் புதிய கார்டுகளில் உள்ளபடி அவர்களுக்கு அவசியமான மில் ஜவுளி கிடைக்குமாறு பார்த்துக் கொண்டால் மிகவும் நேர்மையாகும்.

கைத்தறி ஜவுளியை யாவது வாங்கி உடுத்துக் கொள்ளலாம் என்றால் அதன் விலை மில் ஜவுளி கஜம் 1க்கு ரூ. 0-8-0 என்றால் கைத்தறி ஜவுளியின் விலை இதைவிட 4 பங்கு அதிக விலையாயிருக்கிறது. இருக்கவே ஏழை மக்கள் அவற்றை வாங்கி உடுத்த சக்தி அற்றவர்களாக இருப்பதானாலே தான் மில் ஜவுளி துணியை வாங்கி உடுத்துவதற்கு முயற்சி செய்தும் முடியாமல் திணறுகிறார்கள்; ஆனால் சென்னை மாகாண கண்ட்ரோல் கமிஷனர் அவர்கள் தன் அறிக்கையில்,

'கைத்தறி ஜவுளி வகைகளின் விலையைக் குறைத்து நியாயமான ஒரு அளவுக்குக் கொண்டுவர தற்போதுள்ள கைத்தறி ஜவுளி கண்டிரோல் உத்தரவைவிட மேலான ஒரு திட்டத்தைச் சர்க்காருக்குச் சீக்கிரத்தில் அனுப்ப உத்தேசம்" என்பதாக வெளியிட்டிருப்பதைப் பார்த்தால் விலை குறைவு நடக்கும் என்றாலும் குறைத்தல் மில் ஜவுளி விலைக்குச் சரிசமமாகக் குறைத்தால் தான் ஏழை மக்கள் வாங்குவதற்கு வசதியாய் இருக்குப! இந்தத் திட்டத்தை யாவது சென்னை சர்க்கார் கைத்தறி ஜவுளி விலைக் குறைப்புத்திட்டத்தில் பூர்ண கவனம் செலுத்துவார்களானால் ஓரளவுக்கு ஏழை மக்களின் துக்கத்திற்கு ஆளாகாமல் இருக்க முடியும் ஆனால் முடியுமா என்பதைப்பொறுத்திருந்து பார்ப்போம்.

## நீதி நிர்வாகப் பிரிவினை

நீதி—நிர்வாகங்களைப் பிரிக்க வேண்டுமென்று நம் நாட்டு மக்களிடையே குறிப்பாகக் காங்கிரஸ் தலைவர்களிடத்தில் அதி உத்வேகமாக ஊறிக்கிடந்த எண்ணம் இப்போது ஆட்சி அவர்கள் கையில் வரவே இதைப்பற்றி ஆலோசிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தி அதன் மூலமாக தீர்த்து விடலாமென்றால் அது அகில இந்தியச் சட்டத்தைப் பெருவாரியான முறையில் திருத்தி அமைக்கவேண்டும். ஆனால் இப்போது இருக்கும் நிலையில் சிக்கலான வேலையென்று கூறி உள்ள சட்டத்திற்கு உள்ளிட்ட முறையில் என்ன சீர்திருத்தம் செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டியது என்று கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. இந்த முடிவு அரைகுறையான முடிவேயாயினும் ஓரளவேனும் நீதி நிர்வாகப்பிரிவினை ஏற்படும் என்று எண்ணுகிறது அக்கமிட்டி.

இது தேவையா? அவசியமா என்பதை விளக்கமாக பின்னர் வெளிவரும்.

# மில் துணி ரேஷன்

## ஏன் அதிகத் துணி அளிக்கமுடியாது?

## ஜவுளிக் கமிஷனர் விளக்கம்

மில் துணி ரேஷனைப்பற்றி மாகாண ஜவுளிக் கமிஷனர் 28ந் தேதியன்று பின்வரும் அறிக்கை விடுத்துள்ளார்.

கிடைக்கக்கூடிய மில் துணி, கோட்டாவை ஒவ்வொரு மாதமும் விநியோகம் செய்யத்தான் ஜவுளி கட்டுப்பாடு இலாகா ஏற்பாடு செய்யமுடியும். உபரிப் பிரதேசமான பமபாய் மாகாணத்திலிருந்து இந்த மாகாணத்துக்கு |வரவேண்டிய கோட்டாவில் ஒரு பகுதி வந்தால்கூட வருஷத்திற்குத் தவா 4, 2 கெஜம் மில் துணிதான் கிடைக்கும். ஆனல் கோட்டாவில் ஒரு பகுதிகூட சரியாக வருவதில்லை.

ஆகவே மாகாண முழுவதிலும் வயது வந்தோருக்கு வருஷத்திற்குத் தலா ஐந்து கஜம், சிறுவர்களுக்குத் தலா இரண்டு கஜம் என்ற முறையில் இந்த மிகக் குறைவான கோட்டாவை சமமாகப் பங்கிடு செய்வது என்ற முறையை சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர். மேலும் அதிகமான ரேஷன் கொடுபபது சாத்தியமில்லை,

ஒவ்வொரு குடும்பமும் ஒரு தொகுதி ஒவ்வொரு குடும்பமும் இந்த அரை வருஷத்திற்குள் அரை வருஷ ரேஷன் அளவுக்குள் குடும்பத்தின் எல்லா நபர்களுக்கும் உரிய துணியை வாங்கிகொள்ளலாம்.

புடவைகளும், வேஷ்டிகளும் கிடைக்ககூடிய காலத்தில் குடும்பத்தின் நபர்கள் தங்களுக்குள் ஒரு எற்பாடு செய்து கொண்டு அவைகளை வாங்கிகொள்ளலாம். புடைவைகளைப்போல் அதிக அளவுள்ள துணிகளை வாங்கிக் கொள்ள வேண்டுமானல் யாராவது ஒருவருடைய சௌகரியத்திற்காக குடும்பத்தின் இதர நபர்கள் தங் ரேஷனை தியாகம் செய்ய வேண்டியது தான்.

பம்பாய் உபரிப் பிரதேசத்திலிருந்து மில் துணிகள் அபரிமிதமாக வருவது நிச்சியமற்றதாக இருப்பதாலும் புடவை, வேஷ்டி முதலிய மில் துணிகளின் உற்பத்தி குறைவாய் இருப்பதாலும் ரேஷன் அளவில் எந்த ஒரு குறிப்பிட்ட துணி வகையும் உறுதியாகக் கிடைக்கும் என்று உறுதி கூறுவது முடியாது.

தக்கள் விரும்பும் கைத்தறி ஜவுளிகள் அதிகமாகக் கிடைப்பதாலும் அந்த மாதிரி துணி வகைகளைக் கட்டுப்படுத்துவது அவசியமில்லையென்றும் மேலும் அவைகளின் விலைகளைக் குறைத்து நியாயமான முறையில் ஒரு அளவுக் கொண்டுவா இப்போது இருக்கும் கைத்தறி ஜவுளிக் கண்டிரோல் உத்திரவைவிட மேலான ஒரு திட்டத்தைச் சர்க்காருக்குச் சீக்கிரத்தில் ஒன்று அனுப்ப உத்தேசம் மாகாண ஜவுளி ஆலோசனைக் கமிட்டி இது சம்பந்தமாக ஏற்கனவே சிபார்சுகள் செய்திருக்கிறது. டிசம்பர் 2-ந்தேதியனறு மாகாண ஜவுளி நால் ஆலோசனைக் கமிட்டியின் கூட்டத்திற்குப் பிறகு இத்திட்டத்தைப் பற்றி ஒரு முடிவு செய்யப்படும்.

—————

## மதிப்புரை.

## விதியின் வழி

விதியின் வழி என்னும் பெயரிய புத்தகம் ஒன்று நம் பார்வைக்கு அனுப்பப்பட்டது. ஆசிரியர் சா. ரா. சுந்தரராமன் /விதி, மனிதனின் வாழ்க்கையில் எந்த வகையில் விளையாடுகின்றது என்பதை நிரூபிக்க ஒரு சிறு கதை மூலம் விளக்குகிறார். கதையின் நடை உலக தமிப் பேச்சு நடையில் அமைத்து பாமர மக்கள் எல்லோரும் எளிய முறையில் தெரிந்து கொள்ளும்படி திட்டியிருக்றார். அன்பர்கள் ஆதரிக்கவேண்டுகின்றோம்.

விலை அணு 3

கிடைக்குமிடம் :...

சா. ரா சுந்தரராமன்,
60, பஜார் வீதி, காவேரிப்பாக்கம்,
வ. ஆ. ஜில்லா.

உரிகத்தில் 24—10—46 மாலை 6.30 மணிக்கு தலைவர், M. S. ராஜன் தலைமையில் தீபாவளி கொண்டாடுவதை கண்டித்து, தோழர்கள் உதயம், ஏஜண்ட் S. M. தேவன், வி. ஆர். குப்புசாமி டைலர் முதலியவர்கள் பேசினர்கள், தோழர். தனப்பால் நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

9—11—46ல் உடையார் பாளையம் அறிவுத்துணைப் படிப்பகத்தில் தோழர் டி. டி. கோவிந்தசாமிப் பிள்ளைத் B.A.L.T. தலைமையில், அண்ணமலை பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் தோழர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்களால் படிப்பகத்தின் நோக்கம் என்பது பற்றி சொற்பொழி வாற்றட்டது.


விரைவில் மலர்கிறது.

மகத்தான அழைப்பு

காலண்டர்கள்

கலங்கா நெஞ்சமும், இரும்பு உள்ளமும் படைத்த நமது ஒப்பற்ற தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் நம் இன்பத் திராவிட உலகத்தின் மீது தன் கைக்கோலை ஊன்றி கொண்டு கம்பீரமுடன் தலைநிமர்ந்து நின்றுகொண்டிருக்கிறார்கள். இது வரை வெளி வராததும் பார்ப்பவர் மனதைக்கவரும் முறையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

ஒன்றின் விலை 0—8—0

வியாபாரிகட்கு தக்க லாபம் தரப்படும்.

விபரங்கட்கு:—

திராவிடன் பதிப்பகம்
P. B. I. & வேலூர். (வ. ஆ.)

முந்துங்கள் ! முந்துங்கள் !!

இன்றே ஆர்டர்களுக்கு முந்துங்கள் !!!

எங்கும் புகழ்பெற்ற N. K. P. வேல் அவர்களால் டைரக்ஷன் செய்யப்பட்ட சாயத்தொழில் நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு மேல் நாட்டின் தயாரிப்பைக் காட்டிலும் உயர்ந்தவை என்ற உத்திரவாதத்துடன் அனுப்பப்படுவது?

சாயத் தொழிலுக்கு முதன்மை பெற்றது.

செல்வம் டர்க்கிரெட் ஆயில்கள் அண்டு கெப்தால் சோப்

ஒரே மணி நேரத்தில் நூல் நனைந்து நன்ருய் ஊறிவிடும். அப்பொழுதே சாயங்கள் தீர்க்கலாம். சாயம் தீர்க்கப்பெற்ற நூல் மிருதுவாகவும், பாலீஷாகவும் இருக்கும்.

இண்டாந்திரியன் முதல் கெப்தால் வரை உபயோகப் படுத்தலாம். எவ்விதபரீக்ஷைக்கும் உத்திரவாதமுள்ளது. விலை விபரங்களுக்கு எழுதவும்.

ஏஜண்டுகள் தேவை !!!

விலாசம் :—

செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர்,
திருச்செங்கோடு, P. O., சேலம் ஜில்லா,
உரிமையாளர்:— வேல்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

## எதிரொலி

வேல் :—அப்பா! நீங்கள் சாவைப்பற்றி நினைக்கவே கூடாது மனம் நிம்மதியாக இருக்க வேண்டும். உங்களுக்கு இனி மேல் ஒரு கவலையும் வேண்டாம்.

வீர :—கவலை ... இன்னும் ... ஒரே கவலைதான்!...

வேல்:—என்னப்பா கவலை?

வீர :—சிறு வயசிலியே தாயும் தவப்பனையும் எழந்துட்டு அனாதைய நான் வளத்த என் பேத்தி...செல்விதாண்டா...!... அவளுக்கு ஒரு காரியம்......

வேல :—அதற்கென்ன செய்துவிட்டால் போகிறது.

வீர:—(இருமி) ஆமாப்பா! கண்ணுங்கையுமா வளந்தவள்! செல்வியும் ஒம்மேலே உசுரையே வச்சிருக்கிறு...அவளே நீதான் கண்ணாலம் பண்ணிக்கனும். (இருமி) இனிமே......நீதாம்பா அவளைக் காப்பாத்தனும்...! அவளுக்கு வேறே யாருமில்லே!

வேல :—(மவுனம்)

வீர :...என்டா பேசலே? செல்விமேலே ஒனக்குப் பிரிய மில்லியா?

வேல :—அப்பா!

வீர :—சொல்லு!

வேல :—கலியாணம்...நன்றாக யோசித்துச் செய்ய வேண் டிய காரியமப்பா......!

வீர :—(ஏமாற்றத்தோடு) செல்வியைக் கட்டிக்கிறதுக்கா யோசனே?...அப்பா... என்பேத்தியை நான் வளத்த கண்ணே... நீ கலியாணம் பண்ணிக்க மாட்டியா?...ஆ!...(வீரப்பன் ஆவி பிரிகிறது)

வேல :—(மருண்டு) அப்பா! அப்பா!......

செல் :—(அழுது) தாத்தா! தாத்தா!

(தேம்பி அழுகின்றனர்)

### காட்சி 3

(மிட்டாதார் பொன்னம்பலமும் மனைவி தெய்வயானையும்)

தெய் :—பாவம்! கபடுருதற்ற உழைப்பாளி உத்தமன் வீரப்பன் போய்விட்டான்.

பொன்னம்பலம் :—தெய்வானை! வீரப்பனின் சாவு நமக்குப் பெரிய நட்டம்! அவன் இல்லேன்னு நமது பண்ணை இவ்வளவு ஓங்கியிருக்கவே முடியாது. வீரப்பனைப்போல் வேலைக்காரன் கிடைப்பது மகாதுர்லபம்!

தெய் :—என் அவன் மகன் இருக்கிறனே!

பொன் :—வேலன்தானே? இருந்தென்ன செய்வது? அவன் நமக்கு வேலைக்காரனுகவா இருக்க முடியும்? பட்டாளத்திலிருந்து வந்த பிறகு அவன் படிப்பும் பாட்டும் நடை செடி பாவனைகளும் எப்படியிருக்கின்றன பார்த்தாயா?

தெய் :—பெரிய தடபுடல்தான் உங்களுக்குத் தெரியுமா? கிழவன் சாகும் பொழுது, வேலனிடம், செல்வியைக் கலியாணம் செய்து கொள்ளச் சொன்னுனும், வேலன் மறுத்து விட்டானும்!

பொன் :—அடபாவமே! ஏன்?...அப்போ அந்தப் பிள்ளையின் கதி?

தெய் :—என்ன செய்வானே தெரியவில்லை.

பொன் :—செல்வி படிப்பும் நாகரிகமுமில்லாதவள்! தனக்கு மனைவியாகத் தகுதியில்லை யென்று நினைக்கிறனே என்னவோ? ...எல்லாம் காலம் மாறிப்போச்சு!......

(மாகதம் சிற்றுண்டியோடு வருகிறள்)

பொன் :—வாம்மா! என்ன அது?

மர :—பலகாரமும் காப்பியும் சாப்பிடுங்கப்பா

பொன் :—இப்படி வையம்மா.

தெய் :—ஆமாம் நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் வேலனுக்குத் தகுந்த வேலை நம்ம மிட்டாவில் என்ன தான் இருக்கப்போகிறது?

பொன் :—யோசிக்கனும்......அவனை விடவும் கூடாது.

மர :—அப்பா வேலன் படித்திருப்பதால் கணக்குப்பிள்ளை வேலை கூடக் கொடுக்கலாமப்பா! நம்பிக்கையும் நாணயமுமாய் பார்த்து வருவான்னு நினைக்கிறேன்.

பொன் :—உம்...நல்ல யோசனைதான் கொஞ்சநாள் போகட்டும்...பார்ப்போம்.

தெய் :—மரகதத்தின் அபிப்பிராயமென்றால் உங்களுக்குக் கடவுளின் கட்டளைதான்! தலையிலே தூக்கிவைத்துக் கொள்கிறீர்கள்!

பொன்:—புத்திசாலிதனத்தை அப்படியடி புறக்கணிப்பது? "பெண் புத்தி பின்புத்தி" என்பதை நான் ஒப்புக் கொள்வதேயில்லை.

(மாகதம் போகிறள்)

### காட்சி 4

(கிணற்று மேட்டில் வேலன் பாடிக் கொண்டிருக்கிறன்) (மாகதமும் சொக்கலிங்கமும் அந்தப் பக்கம் வருகின்றனர்)

"நடவு செய்த தோழர் கூலி காலணவை ஏற்பதும்
உடலுழைப் பிலாத செல்வர் உலகை யாண்டு லாவலும்
கடவுளாணை என்றுரைத்த கயவர் கூட்ட மீதிலே
கடவுளென்ற கட்டறுத்து தொழிலாளரை ஏவுவோம்"

மா :—அண்ணு! வேலனின் பாட்டைக் கேட்டீர்களா? எவ்வளவு இனிமையாகப் பாடுகிறன், பாருங்கள்! அவன் ஒரு லட்சியவாதியாய் விட்டான்,

சொக்கலிங்கம் :—ரொம்ப நன்றாகத்தான் பாடுகிறன் இருந்தாலும் வேலனின் பாட்டும் லட்சியமும் என்னைப் பரிகாசம் செய்வது போலிருக்கிறது!

மர :—என் அண்ணு?......

சொக் :—"போர் வீரன் கலைஞனுக முடியுமா?" என்பது பற்றி நானும் ஜமீந்தார் மாசிலாமணியும் பலமுறை விவாதம் செய்திருக்கிறோம். கொலைத்தொழில் புரியும் வீரன் இசைக் கலைஞனுக முடியாதென்பது என் கட்சி, விவாதத்திலே வெற்றியடைந்தேன், ஆனல் ... வேலன் ...!

மரக :—தங்கள் கருத்து தவறென்பதை மெய்ப்பித்துவிட்டான்! அவ்வளவு தானே?

சொக்க :—அது மாத்திரமல்ல மரகதம்! வேலன் சாதாரண குடியானவன் மகன், படிப்பும் அதிகமில்லை, இவன் படைவீரனுகவும் சமதர்ம வாதியாகவும் வந்து இசைக் கலைஞனுமாகிப் பாடுவதென்றல் எனக்கென்னவோ மனதிற்குள் ஒருமாதிரியாகத் தானிருக்கிறது!

(தொடரும்)

1-ம் பக்கம் தொடர்ச்சி

## மணவாழ்க்கையும் மாதர் மறுமணமும்

என்னும் பெண்களுக்கு மண உரிமை, மறுமண உரிமை கிடைத்து விட்டால்?

“இந்த நடைப்பிணக் கிழவனைக் கட்டியழ எனக்கு மனமில்லை!” என்றுகூறி தொண்டு கிழவனை மணக்கத் தோகை நல்லாள் மறுப்பாள்! மாதர் மண உரிமைச் சட்டம் அவளுக்கு உறு துணையாய் நிற்கும்! மனமில்லா மங்கையினை மணக்க விரும்பும் மௌடீகத்தின் மண்டையிலடிக்கும் அம்மாதர் மண உரிமையும் அதற்கான சட்டமும்! அஃதே போன்று கட்டின கணவன் கடுஞ்சித்தனாய், காட்டுமிராண்டியாய், அழுகு தொழு நோயனாயிருந்து அவளை வதைக்குங் காலத்தில் அவள் துணிந்து வெளிவந்து மறுமணங் கோருவளே! அதற்கு ஆதரவு தருமே மாதர் மறுமண உரிமையும், அதற்கான சட்டமும்!

ஆதலின், இன்னோரன்ன பல வேண்டாக் கூற்றுக்களை வேரொடு களைந்து இந்நாட்டு ஆண் பெண் இருபாலார்க்கும் இனிய இல்வாழ்க்கைக்கு நல்லுதவி செய்யும் **மாதர் மண உரிமைச் சட்டம்** என்று திண்ணமாகக் கூறலாம். பொறுப்புடைய, நாணயமுடைய, சமுதாய எதிர்கால வாழ்வின் ஏற்றத்தில் எண்ணமுடைய எவரும் இக்கருத்தை ஏற்பர். இதற்காவன செய்வர். இக்கருத்துக்களில்லா இழி குணத்தோரே இதனை ஏற்கார்; செய்யார்!

ஆனால் இன்று மாதர் மறுமண உரிமை என்று பேசுபவரை வைதீக உலகம் வெறுக்கிறது. நாத்திகரென்கிறது. ஆனால் அவ்வைதீகக் கூட்டமே கீழ்வரும் வினாக்களுக்கு தக்க விடையிறுக்க முடியுமாவென்று அறைகூவி யழைக்கின்றேன். இளவயதில் கணவனை யிழந்து கைம்பெண்ணாகிய எல்லாப் பெண்டிரும் இன்று இந்நாட்டிலே கட்டுப்பாடுகளுக்கு பயந்து மறுமணம் செய்துகொள்ளாமலிருக்கின்றனரா? அன்றி கணவனையிழந்தவள் மறுமணம் செய்துகொள்ளுவது சாத்திர விரோதமென்று இருக்கின்றனவா? கணவனையிழந்த கட்டிளம் பெண்களை வைதீகம் பேசும் போலி வேஷதாரிகளே கற்பழித்து கர்ப்பிணியான நிலையில் கைவிட்டு தவிக்கவிட்டு விடுவதில்லையா? அப்போது கற்பறமும் சாத்திரமும் எங்கு போய்விடுகின்றது? அல்லது கைம்பெண்ணாய்ப்போன எல்லா இளவயது நடுவயது மங்கையரும் மீண்டும் உலக வாழ்க்கையை அறவே வெறுத்து வாழக்கூடிய மனோவன்மை பெற்றுள்ளனரா? ஆடவரில் மனைவி யிழந்தோர் சில மாதங்கள் அல்லது ஒன்றிரண்டு ஆண்டுகள் மறுமணம் செய்துகொள்ளாமல் இருக்க முடிகின்றது. பல வருடப்பலன் தன் காதலன் மனையாளின் அன்பின் பலத்திலே மறுமணம் புரியாமலிருப்போரும் ஒரு சிலர் உண்டு. ஆனால் பொது வழக்கிலே ஆடவரால் சில மாதங்களே மறுமணமின்றி இருக்க முடிந்தால் பெண்களால் சில ஆண்டுகள் இருக்கமுடியும் பின்னர்? உலகப்பழிக்கு அஞ்சிய உத்தமப் பெண்கள் தங்கள் மன உணர்ச்சிகளை அடக்கி உள்ளம் புண்ணாகி தேய்ந்து மாய்கின்றனர்! அஞ்சாதவர்கள் ஒழுக்கத்தில் இறங்கி கருச்சேதம் செய்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்காளாகி ஒருவன் தைரியமாய் அவளை ஏற்றுக்கொள்ள முன்வராததால் பலராலும் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுகிறாள் இப்போது சாத்திரம் கெட்டுப்போய் விடுவதில்லையா? ஒழுங்கான கிரமமான மறுமண உரிமைச் சட்டம் இழப்பின் மறுமணம் புரிந்துகொண்டு ஒழுக்கத்தோடும் உரிமையோடும் வாழ இடமேற்படும். ஆனால் இன்று மாதர் மண உரிமை மறுமண உரிமைச சட்டம் இந்நாட்டில் இருக்கிறதா இருக்க இந்நாட்டுள்ளோர் விரும்புவாரா? இந்நாட்டு அறிஞர் இதற்கு எவ்வளவு விரைவில் முனைந்தெழுவர்? ஆடவரில் 'பகுத்தறிவைப் பறிகொடுத்தோர் இதனை விரும்பாவிடினும் அறிவுள்ள அறிஞர் தம் கடமை மிகத்தெளிவு அஃதே போல் பெண்டிர் தம் கடமையுக் தெளிவு ஆவன செய்ய விரைந்து முற்படுதல்தான் வேண்டும்! எப்போது? தமிழகமே! பதில்தா!

## யாரிடம் முறையிடுவர்?

“நான் மிராசுதாரர்களிடம் நேரில் போகவோ, அவர்கள் நடத்தை பற்றிக் கேட்கவோ முடியாது

அவைகளுக்காக போலீசும், நீதி மன்றங்களும் இருக்கின்றன.

கம்யூனிஸ்டுகள் என்ன தந்திரம் செய்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அவாகள் ‘ஹரிஜனங்க’ளுடன் நெருங்கிப் பழகுகிறார்கள்.

சேரிக்குப் போகிறார்கள்.

அவர்களுடன் உண்கிறார்கள்

அவர்களுடன் உறங்குகிறார்கள்.

நீங்களும் சேரிக்குச் செல்லுங்கள்.

நீங்களே அவர்களைக் காக்கவந்த தந்தை போலப் பாசாங்கு செய்யுங்கள்.

உடல் முழுவதும் திருநீறு பூசிக்கொள்ளுங்கள்.

பழைய இதிகாச புராணங்களைக் காலச்சேபம் செய்யுங்கள்.

நீங்கள் கொடுக்கும் திருநீறு நீண்டநாளைய நோய்களை யெல்லாம் போக்கும் என நம்பச் செய்யுங்கள்.

நீங்கள் எதைக் கூறியபோதிலும் அவர்களை நம்புமாறு திருப்புங்கள்.

பின்பு கூறுங்கள் அவர்களிடம் ‘கம்யூனிஸ்டுகள் கூறுவதைக் கேளாதீர்கள்! என்னையே பின்பற்றுங்கள் எல்லோரும் காங்கரசில் சேருங்கள் அதிகக் கூலிக்குக் கிளர்ச்சி செய்யாதீர்கள் இக்கிளர்ச்சிகளை கடவுள் பொறுக்கமாட்டார். தலைவிதியை எதிர்ப்பது பெரிய பாபம் எங்களை நம்பினால் உங்களுக்கு வேண்டியதைச் செய்வோம் காங்கரஸ்காரர்களாகிய எங்களையே பின்பற்றுங்கள்.

இவ்வாறு நம் மாகாண சட்டசபை மந்திரி பாஷ்யம் அய்யங்கார் அவர்கள் கூறுகிறார்,

தாணியாண்ட தமிழர்களை எவ்வாறு முன்னாள் ஆரியம் மாற்றியதோ அதே வழியை இன்று தன்மானமடையும் தமிழர்களை காங்கரஸ் என்ற பெயரால் செய்யப்படுகிறது.

வெள்ளை, வெட்டை முதலிய உஷ்ண வியாதிகளுக்கு
எங்கும் பிரசித்தி பெற்ற
இராஜாளி எண்ணை
எந்த மருந்தினாலும் தீராத நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மஞ்சள், ரத்தசீழ், வெள்ளை, நீரடைப்பு, நீர் கடுப்பு, நீர் எரிச்சல், நீர் எரிவு, நீரிழிவு, ஆண்குறி நரம்புவலி, வீக்கம், சொறி, சிரங்கு, ஊரல், படை, கிரந்தி, புண், கைகால் பிடிப்பு, தந்திசூலை, நாபிரணம், கெற்பரணம், முதலிய மிக கொடிய மேக வியாதிகளை மறுமுறை வாராதபடி வேரற நீக்கக் கூடிய மருந்து. இதற்கு நிகர் வேறு இல்லை. குறைந்த விலை நிறைந்த குணம்..
பூர்ண குணந்தீற்கு உத்திரவாதமுள்ளது புட்டி 1-க்கு ரூ. 2—0—0
தயாரிப்பவர் : சித்தவைத்திய பண்டிட் S. V. இராஜரத்தினக் கவுண்டர், R. I. M. (P)
சேர்மன் தம்மண்ண செட்டி ரோட், அரிசிப்பாளையம், சேலம், S. I.

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram, (N. A.)